# தமிழகச் சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் 7–8–2006 அன்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் சென்னைக்கு குடிநீர் வழங்குதல் மற்றும் பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதாக கூறப்படுவது பற்றி படித்தளித்த அறிக்கை.

சென்னை நகருக்கு தற்பொழுது நாளொன்றுக்கு 640 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளான பூண்டி, சோழவரம் மற்றும் செங்குன்றம் ஏரிகளில் தற்பொழுது சுமார் 1.5 டி.எம்.சி. தண்ணீர் உள்ளது. இந்நிலையில் கிருஷ்ணா நதிநீரை உடனடியாக பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்பொழுது ஏரிகளில் உள்ள தண்ணீரின் அளவை கருத்தில் கொண்டு, தெலுங்கு கங்கைத் திட்டத்தின் மூலம் கண்டலேறு அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடக்கோரி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களுக்கு 8.7.2006 அன்று கடிதம் எழுதியிருந்தார்கள். இதை தொடர்ந்து 24.7.2006 அன்று ஆந்திர அரசின் தலைமைச் செயலாளரின் தலைமையில் அதிகாரிகள் குழு சென்னைக்கு வருகை புரிந்து தமிழக தலைமைச் செயலாளர் மற்றும் அதிகாரிகளுடன் இப்பொருள் பற்றி கலந்து ஆலோசித்தனர்.

இதன் தொடர்ச்சியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னைக்கு கிருஷ்ணா நதிநீர் பெறுவது குறித்தும் பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணைக்கட்டுவதாக வந்துள்ள செய்திகள் குறித்தும் மாண்புமிகு ஆந்திர முதலமைச்சருடன் பேச்சு வார்த்தை நடத்த என்னையும் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களையும் ஹைதராபாத் சென்று வரும் படி அறிவுறுத்தினார்கள்.

5.8.2006 சனிக்கிழமையன்று நானும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களும் மாண்புமிகு ஆந்திர முதலமைச்சரை சந்தித்துப் பேசினோம்.

எங்களுடன் பொதுப்பணித்துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர்களும் மற்ற அதிகாரிகளும் உடன் இருந்தனர். ஆந்திர மாநில சார்பில் மாண்புமிகு பாசனத்துறை அமைச்சர் அவர்களும் மற்ற உயர் அதிகாரிகளும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அக்கூட்டத்தில் சென்னைக்கு குடிநீர் நிலைகளில் உள்ள தண்ணீரின் இருப்பினை கருத்தில் கொண்டு உடனடியாக கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் திறந்து விடுமாறு கேட்டுக் கொண்டோம். மேலும் கண்டலேறு மற்றும் சோமசீலா அணைகளின் கொள்ளளவை முழு அளவிற்கு உயர்த்த வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறும், நீர்வரத்துக் கால்வாய்களை செப்பனிடும் பணிகளை விரைவுபடுத்தி முடித்திடுமாறும், ஸ்ரீசைலம் அணையிலிருந்து அதிகமான அளவு நீரிணை சோமசீலா அணைக்கு கொண்டு செல்ல தேவையான நடவடிக்கை எடுக்குமாறும், தெலுங்கு கங்கைத் திட்ட நடைமுறை விதிகளை ஒரு ஆண்டு காலத்திற்குள் தயார் செய்து முடித்திருமாறும் கேட்டுக் கொண்டோம்.

மேலும் பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணைகட்டுவதற்கான பணிகளை துவங்கியுள்ளதாக வந்துள்ள செய்திகளை மாண்புமிகு ஆந்திர முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்து இது பற்றிய விவரங்களை தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டோம்.

மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்கள், குப்பம் மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் வசிக்கும் மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யவும் அப்பகுதியிலுள்ள சுமார் 4000 ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி செய்வதற்கும் பாலாற்றின் குறுக்கே சிறிய அளவிலான அணைகட்ட தற்பொழுது ஆய்வுப் பணிகள் நடக்கிறதே தவிர எந்தவித அரசு ஆணையோ நிதி ஒதுக்கீடோ செய்யப்படவில்லை என்று தெரிவித்தார். தமிழ்நாட்டின் சார்பில், நாங்கள் பாலாற்றின் குறுக்கே கட்டப்படும் எந்த ஒரு தடுப்பு அமைப்பும் தமிழகத்தின்

மூன்று மாவட்டங்களிலுள்ள குடிநீர் மற்றும் பாசன வசதிகளுக்கு மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்று எடுத்துக் கூறினோம். மேலும் பாலாற்றின் நீரை ஆதாரமாகக் கொண்டு கல்பாக்கம் அணுமின் நிலையம் செயல் படுவதையும் கருத்தில் கொண்டு பாலாற்றின் குறுக்கே அணை கட்டுமானப் பணிகளை ஆந்திர அரசு செயல் படுத்துவது தமிழக மக்களின் நலனை பாதிக்குமென்று வலியுறுத்திக் கூறினோம். மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தின் நலனுக்கு எதிராகவும், சட்டத்திற்கு புறம்பாகவும் ஆந்திர அரசு எந்த வித நடவடிக்கைகளையும் எடுக்காது எனவும் திட்டமிடப்படும் தடுப்பு அணை சம்பந்தமான விவரங்களை தமிழக அரசிடம் முன்கூட்டி அளிப்பதாகவும் நமது கருத்தை அறிந்த பின்பு மேல்நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். நாங்கள் பாலாற்றின் குறுக்கே கட்ட உத்தேசித்துள்ள தடுப்பணைத் திட்டத்தை கைவிடுமாறு மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளோம். இது குறித்து நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்களுடன் மேற் கொண்டு பேச உள்ளார்கள்.

சென்னைக்கு குடிநீர் வழங்குவதைப் பொறுத்த வரையில், நமது கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்கள் இந்த மாதம் 15ம் தேதி முதல் கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து நமது எல்லைக்கு வினாடிக்கு 1000ம் கன அடி தண்ணீர் வந்து சேருமளவிற்கு தேவையான நீரை திறந்து விட உத்தரவிட்டுள்ளார் என்பதை இந்த பேரவைக்கு தெரிவிப்பதில் மிகுந்த மிகழ்ச்சியடைகிறேன்.

ஆந்திர அரசுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளின் மூலமாகவே பாலற்றினை வாழ்வாதாரமாக் கொண்டுள்ள மக்களின் நலனையும், சென்னை நகர மக்களின் குடிநீர் தேவையையும் பூர்த்திசெய்ய இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.